*8, ஜூன், 2015*

பொருளாதாரம்

*80 களில் ஒரு வருடத்தில் ஜனவரி 18-ம் தேதி நெருங்கி கொண்டிருந்தது. தாதி அந்த நாட்களில் லண்டனில் முழு நேரமும் இருப்பார். நான் 18 ஜனவரி அன்று ஒரு நிகழ்ச்சியை ஏற்பாடு செய்துகொண்டிருந்தேன். மேலும் எனக்கு உதவிய நபர் அரங்கில் அப்போதிருந்த இளஞ்சிவப்பு திரைச்சீலைகளை ஒரு அழகான வெள்ளை கைத்தறி துணியாக மாற்றுவதற்கு தூண்டப்பட்டார்.*

*நிகழ்வுகளின் வரிசையை பற்றி தாதியோடு நான் உரையாடும்போது, தூய்மையின் குறிப்பாக ஒரு அழகான வெள்ளை நிற திரைச்சீலைகளை நாங்கள் மாற்றுவோம் என்று நான் தாதியிடம் கூறினேன். அவர் திரைச்சீலைகளின் செலவு எவ்வளவு, என என்னை கேட்டார். நான் அவரிடம் 800 பவுண்டுகள் என கூறினேன். அந்த நாட்களில் அது இப்போது உள்ள மதிப்பை விட இன்னும் அதிகமானவையாகும்.*

*அவர் உடனடியாக முடியாது! என கூறினார். ஒரு நாளுக்காக அந்த பணத்தை செலவு செய்வது நியாயமாகாது என்றார்! மக்கள் தங்கள் பணத்தை நம்மிடம் நம்பிக்கையாக ஒப்படைப்பதால் நாம் அதை வீணடிக்க முடியாது என்றார். நான் தாதியிடம் வாதிட்டு சொன்னேன், இந்த நபர் தனது சொந்த பையிலிருந்து விருப்பத்துடனும் ஊக்கத்துடனும் செலவழிக்கிறார் - நான் அவரை கேட்கவில்லை என்று! எனினும் அவர் ஏற்றுக்கொள்ளவில்லை! அவர் அந்த நாள் பணத்தின் மதிப்பை பற்றி எனக்கு கற்று கொடுத்தார், மற்றும் எளிமை என்பது நம்மிடம் இருந்ததை வைத்துக்கொள்ளவும் அடிக்கடி அதை ஒவ்வொரு விஷயத்தில் மாறாமல் வைத்திருக்கவும் உதவியது.*

**விவேகம் நிறைந்த வார்த்தைகள்:**

பொருளாதாரதோடு அனைத்தையும் செய்யவும். பொருளாதாரம் மற்றும் *eknami* -ஒரே ஒருவருடைய பெயரை பயன்படுத்துவது பற்றி புரிந்து கொள்ள வேண்டும். எனக்கு பொருட்களின் தேவை இருக்கவோ அல்லது விரும்பமோ இருக்க கூடாது. மேலும் ஆசைகள் தடைகளை அழிப்பதிலிருந்து உங்களை தடுத்து விடுகின்றன. இதற்கு உங்களுக்கு அதிகமான துறவு தேவைப்படுகின்றது. பொருட்களோடு இணைந்திருக்க வேண்டாம், பொருட்களுக்கு அப்பாற்பட்டு இருக்கவும். அதன் பின்னர் பாபா மந்திரங்களையும் அதிசயங்களையும் செய்வார். பின்னர் பாபா உங்களுக்காக மற்றவர் மூலம் காரியங்களை செய்வார். ஆனால் நீங்கள் உண்மையில் துறவு செய்வது அவசியமாகும். நீங்கள் துறவு செய்த எதிலும் உங்கள் புத்தியானது திரும்ப போக கூடாது. இது உங்களுடைய அதிர்ஷ்டமாகும். முதலில் உங்களுக்கு, பொருட்களில் விருப்பமின்மை தேவை, பின்னர் அவற்றை நீங்கள் துறவு செய்ய வேண்டும், அதன்பின்னர் நீங்கள் ஒரு உண்மையான சந்நியாசி, ஒரு முனிவர் ஆகி விடுவீர்கள், இந்த உலகம் முடிந்துவிட்டது என்பதை அறிந்ததால், துறவு மனப்பான்மையை கொள்ளவும்.

நீங்கள் 'இது நன்றாக இருக்கிறது, எனக்கு வேண்டும்' என்று சிந்தித்தால் நீங்கள் தோல்வி அடைந்துவிட்டீர்கள். எனக்கு தேவையானவை தானாகவே என்னிடம் வரும். பற்றை அழிப்பவராக இருப்பது மற்றும் ஆசைகளிலிருந்து விடுபட்டு

இருப்பது என்றால் என்ன என்று கற்றுக்கொள்ளுங்கள். அதன் பின்னர் நீங்கள் முழுமையாக தேர்ச்சி பெறுவீர்கள். எனக்கு மௌன சக்தி, ஆழமான மௌன சக்தி, உண்மையான மௌனம் மட்டுமே தேவையாகும். எனக்கு தனிப்பட்ட மௌன சக்தி தேவை. உங்கள் மௌன சக்தி மூலம் நீங்கள் எளிதில் மக்களுக்கு ஒத்துழைப்பு, தோழமை, ஆதரவு மற்றும் புரிந்துணர்வை கொடுக்க முடியும். நீங்கள் வார்த்தைகளால் செய்ய முடியாததை, மௌன சக்தியால் செய்ய முடியும். நீங்கள் மௌன சக்தியை புரிந்து கொண்டவுடன், நீங்கள் எப்போதும் வேறு எதன் கட்டுப்பாட்டிலும் இருக்க மாட்டீர்கள்.

நமது பொருளாதாரம் மற்றும் *eknami* (ஒரே ஒருவருடன் யோகம்) மூலம் நமது இராஜ்யத்தை பெறுகின்றோம். இவ்வாறு, பாபா நம்மை விவேகமாக்கி உள்ளார். பொருளாதாரத்தை தக்கவைத்துள்ள ஒருவரே, புத்தியின் மூலம் ஒருவரை நினைவு செய்வது எப்படி என தெரிந்திருப்பவர். சிக்கனமாக இல்லாதவர்கள் தங்களை மற்றவர்களுடன் ஒப்பிட்டு கொள்வார்கள். எ.கா. "இவருடைய காலணிகள் மிகவும் நன்றாக உள்ளது ...

## திருஷ்டிக்கான கருத்து

நான் மற்றவர்களை பார்க்கும் போது, நான் ஆத்மாவிலுள்ள அமைதி மற்றும் அழகின் உண்மையான சாரத்தை மட்டுமே பார்ப்பதற்கு பயிற்சி செய்கின்றேன். நான் ஆத்மாவுடன் கொண்ட முந்தைய தொடர்புகளின் வீணான எண்ணங்கள் அல்லது இருவரிடம் உள்ள சரித்திரங்களை விட்டுவிடுகின்றேன். திரிஷ்டியிலுள்ள இந்த ஆன்மீக பொருளாதாரம் அன்பு செலுத்தும் என்னுடைய திறனை அதிகரிக்க செய்கின்றது.

## கர்ம யோகக் கருத்து:

நான் உலகில் நடக்கும்போதும் சுற்றும்போதும், நான் உணர்வு அளவில் உண்மையான பொருளாதாரத்தை பயிற்சி செய்வேன். நான் விடுபட்டு என்னையே கண்காணிக்கின்றேன். மேலும் தேவையற்ற எண்ணங்கள் மற்றும் செயல்களை விட்டுவிடுகின்றேன். இதை செய்வதன் மூலம், நான் எளிமையின் இனிமையான அமைதியை அனுபவம் செய்கிறேன்.